# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ▣ மாசி 1987 ▣ இதழ்: 134


## மணிவிழாக் காலத்து
# மனம்கொண்ட வேண்டுகோள்


உலகில் இயற்கையாகக் கிடைக்கும் மூலப் பொருள்களைக்கொண்டு உற்பத்திப் பொருள்களை உருவாக்குதல் அறத்தோடு கூடிய முயற்சி. மூலப் பொருள்கள் உள்ளூரிலேயே, உள்நாட்டிலேயே கிடைக்குமாயின் அவை வரப்பிரசாதமாயமையும். இற்றைக்கு அறுபதாண்டுகளுக்குமுன் இயன்ற அளவு உள்ளூர் மூலப் பொருள்களையும் அத்தியாவசியமான வெளிநாட்டுப் பொருள்களையும் கொண்டு யாழ்ப்பாணத்தவரான வீ. மு. கந்தையா



இன்றைய தொழிலதிபர்

அவர்கள் ஒரு சவர்க்காரத் தொழிற் சாலையைக் குடிசைத் தொழில் அளவில் ஆரம்பித்தார். அவர் செய்த சவர்க்காரம் கொண்டு சலவை செய்தால் துணிகள் பால் போன்ற வெண்மைநிறமாக வரும் என்னும் கருத்தில் "மில்க்வைற் சோப்" எனப் பெயரிட்டார். இவ்வாறு பெயரிட்டவர் சோதிட நிபுணர் இராசலிங்கம் ஆவர். கந்தையா அவர்கள் அறுபதாண்டு


(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)



வேலணை, பலநோக்கு கூட்டுறவாளர் மத்தியில் பசுமைப்புரட்சிக்கான ஒத்துழைப்பு

★ காலத்தால் மறையாத காவியங்கள் பூத்த தமிழ் ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்

### திருநாட்டியத்தான்குடி

பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பூணாண் ஆவதோர் அரவங்கண் டஞ்சேன்
புறங்காட் டாடல்கண் டிகழேன்
பேணா யாகிலும் பெருமையை உணர்வேன்
பிறவே னாகிலும் மறவேன்
காணா யாகிலுங் காண்பனென் மனத்தால்
கருதா யாகிலுங் கருதி
நானேல் உன்னடி பாடுத லொழியேன்
நாட்டியத் தான்குடி நம்பீ.

திருச்சிற்றம்பலம்

திருநாட்டியத்தான் குடியில் எழுந்தருளியிருக்கின்ற நம்பியே, தேவரீருக்கு அணிகலமும் அரை ஞாணும் சிறுமையையுடைய பாம்பாதல் கண்டு அஞ்சேன்; தேவரீர் புறங்காட்டில் ஆடுதலைக்கண்டு இகழேன்; தேவரீர் அடியேனது சிறுமையைக் கருதி அடியேனை விரும்பாதொழியினும் அடியேன் தேவரீரின் பெருமையை உணர்ந்து தேவரீரைப் பெரிதும் விரும்புவேன்; வேறோராற்றால் அடியேன் பிறவி நீங்குவேனாயினும் தேவரீரை மறவேன்; தேவரீர் அடியேனைக் கடைக்கணியாதொழியினும், அடியேன் தேவரீரைக் கண்ணாரக் காண்பேன்; தேவரீர் அடியேனைத் திருவுள்ளத்தால் நினைந்து ஏதும் அருள் செய்யாதொழியினும், அடியேன் தேவரீரை மனத்தால் நினைந்துருகிப் பாடுதலை ஒழியமாட்டேன். இஃது அடியேன் அன்பிருந்தவாறு.

# திருவள்ளுவர் - திருக்குறள்

## வினைத் தூய்மை

[செய்யப்படும் செயல்கள் பொருளோடு அறமும் புகழும் பயக்கவல்ல நற்செயல்களாதல்]

"ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை."

தன்னைப் பெற்ற தாயார் பசிக்கப் பார்த்தாலும், நல்லோர் கடிந்த செயல்களை அவள் பசி நீக்குதற் பொருட்டேயாயினும் செய்யக்கூடாது.

### Integrity in Action

Though he sees his mother starving, let him not do those actions which are condemned by wise-men.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மணிவிழாக் காலத்து........

களுக்கு முன்பாக துணிகளுக்கு நீலம் தோய்க்கும் சிரமத்தை நீக்குவதற்காகச் சவர்க்காரத்திலேயே விஞ்ஞான ரீதியாக நீலத்தையும் கலந்துள்ளார். அதனால் அவர்செய்த சவர்க்காரம் அன்றே நீலக்கட்டி எனப் புகழ்பெற்று இலங்கை முழுவதிலும் நல்ல பெயர்பெற்றது. ஆங்கிலேயரின் வர்த்தக நிறுவனங்களாய கொம்பனிகள் பெருமளவில் இறக்குமதிசெய்த ஏனைய சவர்க்கார வகைகளுள் இதுவும் போட்டியிட்டுத் தலையெடுத்து நின்றது.

நாளடைவில் அவருடைய குடிசைத்தொழில் இன்று தொழிற்சாலையாக மாறிப் பலவித உற்பத்திகளை உண்டாக்கித் தருகிறது, பலவிதமாக உபயோகிக்கக்கூடிய சவர்க்கார வகைகளைத் தருவதோடு எண்ணெய் முழுக்குக்குப் பயன்தரும் ஒலிவ் ஸ்நானப்பொடி, நுளம்பைப் போக்கும் நீம் தூபம் என்றிவ்வாறாகத் தரும் உற்பத்திப்பொருள்களுக்கு உள்ளூர் மூலப்பொருள்களே உபயோகமாகின்றன. ஊராபிமானம், நாட்டபிமானம் உள்ளவர்கள் உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவளிப்பர் என்பதுஉறுதி. மில்க்வைற் தொழிலக உற்பத்திகளுக்குக் கிடைக்கும் ஆதரவில் கிடைக்கும் ஆதாயத்தின் பெரும்பகுதி மில்க்வைற் செய்யும் அறப்பணிகளுக்கே உதவுகிறது. மில்க்வைற் தொழிலகம் செய்யும் பன்முகச் சமூகப்பணிகள் உங்கள் ஆதரவுப் பலத்தாலேயே நடைபெறுகின்றன.

சம்பூரண சலவைக்கு வழி




மில்க்வைற் நீல சோப்
உபயோகியுங்கள்.

இதில் நீலம் கலந்துள்ளது. இதன் பத்து மேலுறைகள் அனுப்பினால் உங்களுக்கு மில்க்வைற் செய்தி இலவசமாக அனுப்புவோம்.

★ அஞ்ஞானம் நீக்கும் அருள் சைவம் நிறைந்த மொழி ★

## படித்த பரம்பரை ஒன்று

யாழ்ப்பாணத்து வடமராட்சியில், உடுப்பிட்டிப் பிரிவில், வல்லுவெட்டியில் ஒல்லாந்தர் காலத்து வாழ்ந்த சந்திரசேகர முதலியார் சண்டித்தனத்தில் கப்பிஞரும் கவிபாடும் பெரும் புலவனும் இருந்தவர். விறலிவிடு தூது போன்ற நொண்டிப் பாட்டுப்பாடிப் புலவர்களை மகிழ்வித்தவர்.

அவருடைய மைந்தன் குமாரசுவாமி என்பார் இயற்கை விவேகியாய் கவிபாடும் ஆற்றல் வாய்ந்தவரா யிருந்தார். கோவை, அந்தாதி முதலிய பிரபந்தங்கள் பாடுவதில் பாண்டித்தியம் வாய்ந்த அவர் புரந்திர நாடகம் பாடியவராவர். அவரின் சகோதரர் முத்துக்குமாரு என்பாரும் புலமை மிக்கவராயிருந்தவர். சகோதரி வள்ளியம்மை தொட்டதற்கெல்லாம் பாட்டுப் பாடும் ஆற்றல் வாய்ந்தவர்.

உடுப்பிட்டியில் சந்திரசேகர மாப்பாண முதலியார் என்பவர் வேருெருவர். அவரின் மைந்தன் கதிர்காம பூபதி. கதிர்காம பூபதி முன்சொன்ன வள்ளியம்மையை மணந்து பெற்ற மைந்தன் குமாரசுவாமி. குமாரசுவாமி இளமையிலேயே கவிபாடத் தொடங்கியவர். அவர் பாடிய தனிப்பாடல்கள் தனிச்சுவை பொருந்தியவை. அவர் பாடிய அருளம்பலக்கோவையில் சிலபாடல்கள் கிடைத்துள்ளனவாம். அவர் இந்திர குமார நாடகம் பாடியதாகத் தெரிகிறது. அவர் பெரிய கொடைவள்ளலுமாயிருந்தவர். அவரே அமெரிக்க மிசனரிமாருக்கு ஊரிக்காட்டுப் பெருநிலப் பரப்பை நன்கொடையாகக் கொடுத்தவர்.

குமாரசுவாமி முதலியார் புண்ணிய மணியகாரன் என்று புகழ் பெற்ற மணியகாரனின் புதல்வி சிவகாமிப் பிள்ளை என்பாரை மணந்து சபாபதி என்றும் கதிரைவேற்பிள்ளை என்றும் மைந்தர் இருவரைப் பெற்ருர்.

கதிரைவேற்பிள்ளை 1829 ஆம் ஆண்டிற்பிறந்து 1904ம் ஆண்டில் மறைந்தவர். இளமையில் தந்தையாரிடம் தமிழ் பயின்று இராமாயணத்துக்கு வியாக்கியானஞ் செய்தவர். இராமாயணப் புலமையோடு 1841 ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டை அமெரிக்க மிசனரிமாரின் செமினறியிற் சேர்ந்து ஆருண்டுகளுள் அறிய வேண்டியவற்றை அறிந்துகொண்டார். அவர் அங்கே தங்கியிருந்து படித்தபோது தந்தையார் தனிவீடும் சமையல் ஒழுங்கும் செய்து கொடுத்திருந்தார். செல்வச் செருக்கில்லாமல் அக்காலத்து வழக்கத்துக்குப் புறம்போகாமல் வைமன் என்னும் பெயரையும் சேர்த்து வைமன் கதிரைவேற்பிள்ளை என உயர் வகுப்பிற் படித்தார். அதிபர் கலாநிதி ஹொசிங்ரன் இவரிடம் தமிழருமையைச் சுவைத்து வந்தார். அதிபர் சைவசித்தாந்தத்தில் ஊறி சிவப்பிரகாசம், சிவஞானபோதம், தத்துவக் கட்டளை முதலிய நூல்களைப் பயின்று ஆங்கிலத்தில் பெருநூல் எழுதுவதற்கு உதவியாயிருந்தவர்களுள் ஒருவர் கதிரைவேற்பிள்ளை ஆவர். இவர் அங்கே கற்ற காலத்தில் சமஸ்கிருதம், லற்றின், கிறீக், ஹிபுறூ, ஆங்கிலம் முதலாய மொழிகளையும், கணிதம், வானியல், தர்க்கம் முதலாய துறைகளையும் நன்கறிந்தார்.

— தொடரும்

## சென்ற நூற்ருண்டில் எண்பத்தேழு

சென்ற நூற்ருண்டில் நூண்ருடுகளுக்குமுன் நிலவிய ஆண்டு 1887. அன்று ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய போதிலும், தாய்மைக்குணம் நிரம்பிய விக்ரோறியா மகாராணியார் தமது ஆட்சியின் பொன்விழாப் பொலிவு கண்டு மகிழ்ந்திருந்தார்.

இலங்கையில் ஐம்பது வயதுக்கு அதிகமான சட்டசபை சட்டநிருபணசபைகள் தேசாதிபதி அவர்களுக்கு உதவியாக நிலவின. அச்சபைகளில் உத்தியோக அங்கத்தவரான வெள்ளைக்காரரே ஆட்சிப் பொறுப்பு அதிகமுள்ளவராயிருந்தனர். பொன். இராமநாதன் தமிழரின் பிரதிநிதியாயிருந்தார்.

அந்தக் காலத்தில் நாட்டில் வெள்ளி உலோகத்துக்குத் தட்டுப்பாடு நிலவியது. வேடிக்கை காட்டுற வெள்ளிப் பணம் என்று நகைச்சுவைப் பாடல் ஒன்று எழுந்தது. பத்து ரூபாத்தாள் மாற்றுவதானல் ஒன்பது வெள்ளி ரூபா நாணயங்களே கிடைத்தன. முத்துக்குளிப்பதில் அரியாலையார் முந்திக்கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தார் யாழ்ப்பாணம் வரை புகையிரதப் பாதை வேண்டுமென விண்ணப்பித்தனர். யாழ்ப்பாணத்தில் விளையும் உப்பை எடுப்பதற்கு மனுவேல் பிள்ளை 50,000 ரூபா கொடுத்து ஒப்பந்தம் எழுதிக் கொண்டார்.

## யாழ்ப்பாணம் சுதேச உயர்நிலைப் பள்ளி

இன்று இலங்கையில் முதல்தரமான கல்லூரி என்று புகழ்பூத்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முன்னேடியாக அமைந்த உயர்நிலைப்பள்ளி 1887 இல் டிசெம்பர் மாதத்தில் இருபத்தேழாம் நாளில் அமைந்தது. அதனை நிறுவிய தனியார், பெரியார், நல்லவர், கல்விமான், உயர்ந்தவர், ஒழுக்க சீலர் வட்டுக்கோட்டை வேளாளன் முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை அவர்களாவர்.

சங்குவேலியூரைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வர், வட்டுக்கோட்டை செமினரிற் கற்று விற்பத்திமானயபோது பெற்ற பெயர், வில்லியம் நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை என்பதாகும். அவர் சங்குவேலியிலிருந்து தலைப்பாகை, கோட், உத்தரீயம், பஞ்சகச்சு ஆகிய உடை விசேடங்களுடன் தினமும் காலை நடந்து வந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி கற்பித்துவந்தார். வரும்போதும், மீளும்போதும் மாணுக்கர் ஓடியோடிப் பின்தொடர்ந்து பல பாடங்களையும் செவிவாயாகக் கேட்டு மனனஞ்செய்வதும் உண்டு.

இப்படியாக இருந்துவந்த காலத்தில் அவருக்கும் மத்திய கல்லூரி முகாமையாளருக்குமிடையில் கருத்து வேறுபாடு எழுந்ததும் அவர் வெளிநடப்புச் செய்ததைக் கண்ட மாணுக்கர்கள் சிலர் தாமும் வெளியேறினர்கள். அவர் உடனடியாக ஆரம்பித்த உயர்நிலைப் பாடசாலையை அப்புக்காத்தர் நாகலிங்கம் 1889இல் பொறுப்பேற்று 1890 இல் சைவம் வளர்த்த சபையிடம் ஒப்படைத்தார்.

★ சொல்லரிய புகழ்பூத்த சொல்லாட்சித் தூயதமிழ் ★

## பரோபகாரம் நல்ல தர்மம்

ஒருவன் தனக்கென எதையும் ஒதுக்கிவைக்காமல் பிறருக்குப் பயன்படும்படி கொடுத்தல் பரோபகாரம் எனப்படும். அவரைத் தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளர் என்று கூறுவார்கள். சந்திரன் வானத்தில் அழகாகத் தோன்றுகிறது. ஆனல் அதற்குள் ஒருபகுதி இருட்டாய் இருக்கிறது. சந்திரன் அந்த இருளை நீக்காமல் உலகத்தின் இருளை நீக்குகிறது.

முற்காலத்தில் விருத்திரன் என்னும் அசுரன் இருந்தான். அவனை விருத்தாசுரன் என்று எல்லோரும் கூறி அஞ்சினர். அவன் மிகவும் கொடியவன். அவன் தேவர்களை அடக்கி ஒடுக்கி வதைத்துவந்தான். தேவர்கள் எல்லோரும் திருமாலிடம் சென்று முறையிட்டனர்.

அவர்கள்மீது இரக்கங்கொண்ட திருமால் அவர்களைப் பார்த்து, "நீங்கள் அஞ்சவேண்டாம். அந்தக் கொடியவனை அழிப்பதற்கு ஒரு வழி சொல்லித் தருகிறேன். நீங்கள் அதன்படி செய்யுங்கள். பூவுலகில் இமயமலைச் சாரலில் ததீசி என்னும் முனிவர் தவம் செய்துகொண்டிருக்கிறர். அவர் ஒரு மகான். உயிர்கள்மீது இரக்கம் உள்ளவர். யாவர் எதைக் கேட்டாலும் இல்லை என்னது கொடுப்பார். அவர் அன்புடையவராதலால் தம்முடைய எலும்பையும் மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடியவர். அவரிடம் நீங்கள் சென்று இரந்து கேட்டால் அவர் தமது முதுகெலும்பைத் தருவார். நீங்கள் அதைக்கொண்டு வச்சிராயுதஞ்செய்து விருத்தாசுரனுடன் போர்செய்து அவனைக் கொல்லுங்கள்."

தேவர்கள் மகிழ்ந்து, திருமால் சொன்னவண்ணம் ததீசி முனிவரிடம் சென்று அவரை வணங்கினர்கள் அவர் தேவர்கள் மீது இரங்கி, "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். உடனே அவர்கள் "தங்களுடைய முதுகெலும்பு எங்களுக்குத் தேவையாயிருக்கிறது" என்றர்கள். முனிவர் மகிழ்ந்து "நல்லது தந்தேன், எடுத்துச் செல்லுங்கள்" என்று கூறி யோகாசனமுறையில் மூச்சை ஒடுக்கி உயிரை விட்டார். அவர் இறந்ததும் தேவர்கள் அவரின் உடம்பை எடுத்து அதன் முதுகெலும்பு கொண்டு வச்சிராயுதஞ்செய்து, விருத்திராசுரனேடு போர்புரிந்து அவனைக் கொன்றர்கள்.

### அறம் கூற்றுக வரும்

அழிவுப் பாதையை வகுத்து அதிகார பலத்தினல் உயிர்ச்சேதம் செய்ய முற்படும் தீயசக்திகளை அறம் சுடும் சூருவளி, வெள்ளம், மண்சரிவு, பஞ்சம் முதலியன அறம் ஆவேசம் கொள்ளும்போது வெளிப்பகர்ப்பாகவருவன. அதிகாரத்துக்கும் ஓர் அளவு உண்டு. கரணம் தப்பினல் மரணம்.

### நாடகப் பேராசிரியர் சம்பந்த முதலியார் தந்தவை

புஷ்பவல்லி, இரத்தினவளி, மனேகரா, இரண்டு நண்பர்கள், கள்வர் தலைவன், வேதாள உலகம், சபாபதி, மாக்பெத், ஹாம்லெற், வெனிஸ் வர்த்தகன், விரும்பிய வண்ணமே.

## நினைவிற்கொள்ளத்தக்கவை - I

| | | |
|---|---|---|
| 1. | நினைப்பவனை காப்பதாய் உள்ளது ... | மந்திரம் |
| 2. | என்றும் ஒழுக்கமுள்ளதாயுள்ளது ... | பிரமம் |
| 3. | பாரம்பரியமாய் வருவது ... | சம்பிரதாயம் |
| 4. | சரியானதும் நல்லதுமானது ... | புண்ணியம் |
| 5. | தீயதும் தவறனதுமானது ... | பாவம் |
| 6. | உருவமின்றி இருப்பது ... | அருவம் |
| 7. | பாசநீங்கிப் பரசுகம் பெறுவது ... | முத்தி |
| 8. | பழமறையின் முதலெழுத்து ... | பிரணவம் |
| 9. | எடுத்த இப்பிறவியின் அனுபவம் ... | இம்மை |
| 10. | இரண்டறக் கலந்தது ... | அத்துவிதம் |
| 11. | அயன் அரி அரன் என்போர் ... | மும்மூர்த்திகள் |
| 12. | ஆக்கல் அளித்தல் அழித்தல் ... | முத்தொழில் |
| 13. | இயங்குவனவும் நிற்பனவும் ... | சராசரங்கள் |
| 14. | நடனமிடும் இறைவன் ... | நிருத்தர் |
| 15. | பெருமை பொருந்தியவர் ... | அண்ணல் |
| 16. | முறைப்படி நடப்பது ... | வரன் முறை |
| 17. | உருத்திராக்கம் ஐந்தெழுத்து ... | சாதனம் |
| 18. | ஊர்க்காணித் தெய்வம் ... | கிராம தேவதை |
| 19. | அக்குமணியாலான அணி ... | மனவு அணி |
| 20. | குங்கும மரத்தின் பெயர் ... | மரவம் |
| 21. | சக்கரப்படையையுடையவர் ... | நேமியோன் |
| 22. | நீரிலுதிக்கும் பூவகை ... | அம்புஜம் |
| 23. | இறைவனேடு தியானத்தில் அழுந்தல் ... | சமாதி |
| 24. | அருவமாகிய சிவம் ... | அகளம் |
| 25. | உருவமுடைய சிவம் ... | சகளம் |

## புதுயுக குதூகல மின்வண்டி

புகைவண்டி, டீசல்வண்டி என்ற பெயர்கள் பழையனவாயக் கழிய மின்வண்டி என்னும் பெயரோடு விரைவாக மக்களை ஏற்றி இறக்கும் குதூகல வண்டி, யப்பான்காரனுக்குத்தான் பெருமை தருவது. ரோக்கியோவிலிருந்து ஒசாக்கா வரை 320 மைல் தூரம் போய் வரும் வண்டி, வழியில் யோக்கஹாம, ஒடவடரா, அதாமி, சிசுவோகா, ஹமமட்சு, ரொயோஹாசி, நாகோயா, ஹாஜிமா, மெய்பாரா, பியோட்டா நகரங்களைக் காண்கிறது. இவை வெவ்வேறு தீவுகளிலுள்ளன வாயினும் மின்வண்டிக்கு ஒரே ஓட்டம்தான். இடையில் சுரங்கப்பாதைகளும் உண்டு. ரன்ன சுரங்கம் நீளமானது என்பர். அன்று 1964 ஆம் ஆண்டில் 125 மைல் வேகத்தைப் பிடித்த வண்டி இன்று இன்னும் விரைவாக ஓடுகிறது. வசதிகள் பலவாகியுள்ளன.

### தண்ணீர்

தண்ணீரே! நீ எமக்கு மகிழ்ச்சியைத் தருகிருய். வலிமையைத் தருகிருய். தூய்மையைத் தருகிருய், மங்கலத்தைத் தருகிருய். நீ தாய்மைக் குணமுள்ளவள். நீ உன்னை அண்டியவரின் கேட்டை நீக்கி நல்லவராக்குகின்றுய். எல்லாவற்றுக்கும் மேலாக நீயே எங்களை உண்டாக்கினுய். உனக்கு எங்கள் வணக்கம்.

— இருக்கு வேதம்

★ நெல்விதைபோல் நூல்கள்தந்த நெடுங்காலத் தமிழ் ★



## பஞ்சதந்திரம்

செல்வம் உண்டானால் தானும் அனுபவித்து, உத்தமர்கள், ஏழைகள் முதலானவர்களுக்கும் கொடுத்தல் வேண்டும். கொடுத்தலால் இன்பமும் புண்ணியமும் உண்டாகும். கொடுக்காத செல்வம் வீணாகும். பொருள் சம்பாதித்தல் யோக்கியமான தொழில். அதை யோக்கியமாகத் தருமந் தவறாது செய்தல் வேண்டும்.

தனக்குத் தகாத காரியத்தைச் செய்தால் யார்க்கும் துன்பம் உண்டாகும். புகழோடு வாழ்கின்றவர்கள் பாக்கியவான்கள். மூடன் நன்மை தீமை தெரியாமல் அற்பனாகிறான். தன் முயற்சியாலும், குணத்தாலும் ஒருவன் சமர்த்தனாகிறான். புத்திசாலிகள் அருமையான காரியங்களைச் செய்வார்கள். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். சமர்த்தனுக்கு எதுதான் பெரிது? பறவைக்கு எதுதான் தூரம்? வித்துவானுக்கு எதுதான் பரதேசம்? பிரியமாகப் பேசுகிறவனுக்கு எவர்தான் பகைவன்? காலம் அறிந்து பேசினால் அவமானம் உண்டாகாது. கண்டபடி பேசினால் அவமானம் உண்டாகும். நெருப்பைத் தலைகீழாகப் பிடித்தாலும் அது மேல் நோக்கும். சற்குணனை அவமதித்தாலும் அவன் குணம் மேல் நோக்கி நிலவும். ரூபத்தைப் பார்க்காமல் குணத்தையே பார்க்க வேண்டும்.

வாள் முதலிய ஆயுதங்களும், வீணை முதலிய வாத்தியங்களும், பூமியும், பெண்களும், யோக்கியர்களும், சாஸ்திரங்களும் பரிபாலனம் பண்ணுகிறவர்களாலே பிரகாசம் அடையும்.

## நாம் உருப்பட வேண்டும்

நமக்குத் தரமான உணவு, தரமான நுகர் பொருள்கள், தரமான சாதனங்கள், தரமான சுகாதாரம், தரமான உறைவிட வசதிகள், தரமான சூழல் என்பன அமையும் காலம் என்றோ அன்றே எமக்கு விடிவுநாள். அன்றே பொங்கல், அன்றே மங்களம்.

மற்றவரை மட்டந்தட்ட வயிற்றில் அடிக்கும்குணம் மிலேச்ச நாகரிகத்தின் எச்சம். முன்னர் நெப்போலியனுக்கு எதிராக ஏனைய நாடுகள் மட்டந்தட்டி, சீனி கோப்பியைக்கூடத் தடைப்படுத்தியபோது, நெப்போலியன் அவற்றுக்குப் பதிலாக உற்பத்தி செய்வதற்கு வேறு மூலப் பொருள் வசதிகளை அறிந்தான். பறங்கியர் கெடுபிடி செய்தபோது மானமுள்ள தமிழர் பனையை நாடி நம்பி வாழ்ந்தனர். பறங்கியர் பல்லாயிரம் பனைகளைத் தறித்தும் வடக்கில் வடலிகள் இன்று பனைகளாகிவிட்டன. பனை பரம்பரையாகப் பூட்டன், பேரன், தந்தை, மகன் என்பவருக்கு வாழ்வளித்தது, வாழ வைத்தது.

## ஏன் இந்த அநியாயப் பிரிவுகள்

இந்த உலகம் உருண்டையானது என்றும் அதன் கட்டுக்கோப்புக் குலையாமல் இருத்தற்பொருட்டு பெருநீர்ப்பரப்பாற் சூழப்பெற்றதென்றும் முதலிற் கண்ட தமிழன்; உலகம் ஒன்றேயென்றும், யாதும் ஊரே என்றும் கண்டு அருமையான ஒருமைப்பாட்டினை ஒல்லும் வகையாற்கண்டு கூறினான். உலகின் நன்மையின் பொருட்டு உலகமெல்லாம் என்றே பின்வந்த தமிழரும் பெருமையுடன் பேசினார்கள். பின் வந்தவர்களுள் முன் வந்த கம்பர் உலகம் என்றெடுத்துப் பாடியதோடு, ஒரு சர்வதேச சகோதரத்துவத்தையும் நன்கு கண்டு பாடியுள்ளார். குகன், சுக்கிரீவன், விபீடணன் முதலானோர் தன் தம்பியர் என்றே இராமன் கருதினான்.

அண்மைக்கால வரலாற்றிலே அமெரிக்கநாடு தான் வளரும் போது ஐரோப்பிய நாடுகள் தன்னிடம் அதிகாரம் செலுத்துதல் ஆகாது என்று கூறி, தான் வளர்ந்தபின் உலகில் வளரும் நாடுகளை உருக்குலைப்பதில் அதிகாரம் செலுத்துகிறது.

இன்று உலகில் உள்ள அநியாயப்பிரிவினைகளுள் வட அத்துலாந்திக் ஒப்பந்தமும், வார்சோ ஒப்பந்தமும் ஒன்றையொன்று எதிர்ப்பதால் உலகம் துகள்களாக மாறுமளவில் நிலைமை உருவாகி வருகிறது.

உலகில் பல நாடுகளில் ஒட்டுண்ணியாய் ஒட்டுக்குடிகளில் வாழ்ந்த ஓர் இனம், இன்று ஒரு நிலம் கிடைப்ப, அதை நாடாக்கிக்கொண்டு, மற்றைய நாட்டுமக்களை உருக்குலைத்து ஒட்டுண்ணிகளாய் வாழவைப்பதற்கு வழி கோலுகிறது.

## அதோ பறை கேட்கிறது!
## என்ன பறை?
## பசுக்களைப் பாதுகாக்கட்டுமாம்!

பசுக்களையும், அந்தணர்களையும், பெண்களையும், நோயாளிகளையும், பிள்ளைகளை இதுவரை பெறாதவர்களையும் பாதுகாப்பான இடத்துக்குப் போகட்டுமாம். பகைவன் அம்புவிடப்போகிறானாம். அவன் யுத்த தருமம் அறிந்த பகைவனாம்.

“ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்னர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர் பெறு அதீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்....”

★ தெள்ளுதமிழ் எனச் சீர்பெற்றுயர்ந்த மொழி ★

# சொன்னவையும் சொன்னவரும்

## சொன்னவை

1. உன் வாழ்வு புல் நுனிமேல் நீர்போல மெதுவாக அசையட்டும்.
2. வாழ்வு என்னும் மலரில் அன்பு என்பதே தேன்
3. படிக்குந்தோறும் எமது அறியாமையை அறிகிறோம்
4. அறிவு என்பது ஆர்வத்தின் கண்ணுயிருந்து ஆன்மாவின் தேரோட்டியாய் மலரும்
5. சரியானதைக் கண்டும் செய்ய முடியாமை கோழைத்தனம்
6. கடமையின் பாதை மலர் தூவிய வழியல்ல, பனி நீர் தெளித்த பாதையல்ல
7. கஷ்டங்களைக் கண்டு அஞ்சுதல் ஆண்மையை இழப்பதாகும்
8. பிழைவிடுவதற்குச் சுதந்திரமில்லாத சுதந்திரம் சுதந்திரமாகாது
9. முன்னேற்றம் என்பது இன்றைய முயற்சியும் நாளைய நம்பிக்கையுமாகும்
10. தேசசுகம் உள்ளவன் நம்பிக்கை உள்ளவன். நம்பிக்கை உள்ளவன் எல்லாம் உள்ளவன்

## சொன்னவர்

1. தாகூர் 2. விக்ரர் கியூகோ 3. ஷெல்லி
4. வில்ருரூன்ற் 5. கொன்பூசியஸ் 6. திலகர்
7. திலகர் 8. காந்தியடிகள் 9. எமர்சன்
10. அரேபிய பழமொழி

## ஆறும் ஜோர்ச் மன்னர்

இங்கிலாந்தின் இணையில்லா அரசர்களுள் வின்சர் இல்ல முதல்வர் ஐந்தாம் ஜோர்ச் மன்னரின் இளைய மைந்தரும், எட்டாம் எட்வெட் மன்னரின் தம்பியும், இன்றைய எலிசபெத் இராணியின் தந்தையுமான யோக்கோமகன் அரசு கட்டிலேறி ஆறும் ஜோர்ச் ஆன வைபவம் உருக்கமானது.

ஐந்தாம் ஜோர்ச் மன்னரின் மூத்த மைந்தன் எட்வேட் வேல்ஸ் இளவரசராயிருந்த காலத்தில், தம்பி அல்பேட் பிறெடறிக் ஆர்தர் ஜோர்ச் 14. 12. 1895 இல் பிறந்து, கடற்படைப் பயிற்சி பெற்று, விமானப்படையில் பயிற்சிபெற்று யுத்தமுனைகள் கண்ட தளபதியாய் யோக்கோமகனுகிக்குடும்பவாழ்வில் மகிழ்ந்திருந்தவர். மூத்தவர் எட்வேட் அல்பேட் கிறிஸ்ரியன் ஜோர்ச் அண்றூபற்றிக் டேவிட்பிறப்பு 23. 6. 1894 போர்ப் பயிற்சியும் பெற்றுக் களங்கள் பல கண்டு, வேல்ஸ் இளவரசராயிருந்த போது தந்தையிறப்ப 20-1-1936 முதல் 10-12-1936 வரை அரசராயிருந்து தன் காதலி திருவாட்டி சிம்சன் இரண்டு முறை விவாகரத்துச் செய்தவரான அமெரிக்கப்பெண்ணை மணம் செய்வதற்குப் பிரதம மந்திரியார் தடை விதித்த போது, காதலுக்காக அரசபதவியை வேண்டாம் என்று முடி துறந்தார்.

எதிர்பாராத விதமாக இது நடைபெறவே எதிர்பாராதிருந்த தம்பி ஜோர்ச் அரசராக வேண்டி வந்தது. தன் அண்ணன் முடி துறக்கத் தீர்மானித்த செய்தியைத் தாயிடம் கூறப்போன ஜோர்ச் தன்னையறியாமலே வெம்பி அழுதாராம். அந்த அழுகை பரதன் அயோத்தியில் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அழுத அழுகை எனலாம்.

அழுகை ஓய்ந்த ஜோர்ச் 1936 மார்கழியிலே மன்னராகி 1937 மேமாதம் 12ஆம் நாளில் முடிபுனையப்பெற்று அரசராகி இரண்டாம் மகாயுத்தமும் கண்டவர். வேண்டாவெறுப்பாக அரசுரிமை ஏற்றவர். காலத்திலே பிரித்தானியப் பேரரசு குடியேற்ற நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கி வெறும் அரசானது. ஆறும் ஜோர்ச் 1952 வரை அரசாண்ட பின் அவருடைய மூத்த மகள் எலிசபெத் இராணியாகி இப்பொழுது ஆட்சி செய்கிறார். அவர் எமக்கு இராணியாயில்லாமல் பொது நலவாய நாடுகளின் தலைவியாயிருக்கிறார். அவர் இருக்க.

அன்று 1937ஆம் ஆண்டில் ஆறும் ஜோர்ச் மன்னரின் முடிசூட்டு வைபவத்தை ஆசீர்வதிக்கச் சென்ற இலங்கைப்பெரியவர் குழுவுக்குத் தலைவராகச் சென்ற அரசாங்க சபையின் வாசகர் என்னும் சபாநாயகர் எங்கள் வைத்திலிங்கம் துரைசாமி அவர்கள் மன்னரளித்த நைற் பட்டமேற்று சேர். வைத்திலிங்கம் துரைசாமியாக மீண்டார்.

## பேராசிரியர் வ. பெருமாள்

1. பிறர் பேசுகின்ற மொழி புரியாவிட்டாலும், அவர்கள் உணர்த்துகின்ற கருத்தை அறிந்து கொண்டால் போதும்.
2. மிகுதியாக வாக்குறுதிகளைக் கொடுப்பவனை நம்பலாகாது. அவன் ஒன்றையும் நிறைவேற்ற மாட்டான்.
3. உடம்பைப்பற்றிப் பேசுபவனை விட உள்ளத்தைப் பற்றிப் பேசுபவன் ஒருபடி உயர்ந்தவன்.
4. படித்த முட்டாளை விடப் படிக்காத மேதை ஒரு கோடி மடங்கு உயர்ந்தவன்.
5. கோயிலுக்குச் சென்ற பின் மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும்.
6. தலைக்குப் பாதுகாப்பு தொப்பி, காலுக்குப் பாதுகாப்பு செருப்பு, வாழ்க்கைக்குப் பாதுகாப்பு ஒழுக்கம்.
7. நல்லவனின் புன்முறுவல் உள்ளத்திலிருந்து தோன்றுகிறது, வஞ்சகனின் புன்முறுவல் உதட்டிலிருந்தே தோன்றுகிறது.
8. ஒற்றுமை உள்ளத்தால் உண்டாதல் வேண்டும். சேர்க்கசில் புலியும் ஆடும் இணைந்து நிற்பது நிலைக்காது.
9. உணவு, உடை, உறைவிடத்துக்கு மேலாக அறிவுப்பசிக்குக் கல்வி, இதயப்பசிக்குக் கலை, ஆன்மீகப் பசிக்குத் தெய்வம் வேண்டும்.
10. பண்புள்ளவன் உத்தமன், வெறும் படிப்புள்ளவன் மத்திமன், பணம் மட்டும் உள்ளவன் அதமன்.

★ தென்னாட்டுத் தனிச் சைவத் துணையிருக்கும் மொழி ★

## சீவகசிந்தாமணிப் பதிப்புக்கு நூறுவயதாயிற்று

சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சிந்தாமணி என்னும் ஐந்து நூல்களும் பெருங் காப்பியங்கள். இவற்றுள் குண்டலகேசி, வளையாபதி ஆகிய இரண்டும் இன்று கிடைப்பதில்லை. சிந்தாமணி சமணப்புலவர் திருத்தக்கதேவர் என்பவரால் சுவை ததும்பச் செய்யப்பெற்றது. சிந்தாமணியின் காப்பிய ரசனையிற் பலர் வெகுவாக ஈடுபட்டதுண்டு. அன்று கும்பகோணம் மன்றத்தலைவராக இருந்த இராமசாமி முதலியார் உ. வே. சாமிநாதஐயர் அவர்களிடம் ஏட்டுப் பிரதியைக் கொடுத்து, அதனை அச்சிடுவதற்கான செலவையுங் கொடுத்த உபகரிப்பினால் ஐயர் அவர்கள் அதனை 1887 ஆம் ஆண்டிற் பதித்தார். பதித்தவுடன் அதன் முதற்பிரதியை பயபக்தியோடு யாழ்ப்பாணத்து நல்லூர் சரவணமுத்துச் செட்டியார் பொன்னம்பலபிள்ளை என்னும் வித்துவ சிரோமணி அவர்களுக்கு அனுப்பினார். இவர் ஆறுமுகநாவலர் அவர்களின் தமக்கையாரின் மைந்தன். புத்தகத்தோடு ஐயரவர்கள் எழுதியனுப்பிய கடிதம் உருக்கமானது. அதில் "பாற்கடலின் ஆழத்தை மந்தர மலையே அறியும்" என்று பொருள்பட எழுதியிருந்தார். யாழ்ப்பாணத்தாரின் கலாரசனை இருந்தவாறு.

## அந்த மடமும் குளமும்

சைவசமய வாழ்வில் இன்பங்கண்டவர்கள் சமூகப் பணியில் ஈடுபடத் தொடங்கியதும் மடமும் குளமும் அமைத்தல் அந்தக்காலத்தில் வழக்கமாயிருந்தது. மடமும் குளமும் அமைத்தபின் அயலில் சுமைதாங்கி, ஆவுரிஞ்சிக்கல் அமைப்பதும் உண்டு.

சிதம்பரத்திலே பொன்னம்பலம் பொலியப் பூவையுடன் முன்னம் பல நடனங்கள் ஆடியருளியவர் இன்னும் ஆடிக்கொண்டே இருப்பவர் அந்த அம்பலத் தாடி, அருட்பெரும் அரசர்.

கனகசபை நகரம் பொன்னம்பலத்தால் மலர்ந்த பெரிய வாழ்விடம். அங்கே உமையாள் பெயரால் ஒரு சிற்றொழுங்கை, அதன் தென்பாகத்தில் உள்ள மடம் 1650 ஆம் ஆண்டளவில் அமைக்கப்பெற்றது. அதனை அமைத்தவர் யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியைச் சேர்ந்த ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள். மடம் அமைத்ததோடு திருக்குளமும் அமைத்தவர். அந்தத் திருக்குளத்திலே சிதம்பரேசர் தீர்த்தத்திருவிழா முன்னொரு காலத்தில் முறையாக நடைபெற்று வந்தது.

சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையார் தங்கள் வருமானங்கொண்டு மடத்தைப் பரிபாலித்ததாக 1926 ஆம் ஆண்டறிக்கை கூறுகிறது. குளத்தைப் போலப் புனிதமும் பெருமையும் வாய்ந்த அந்த மடத்திலே 1930 வரை நீண்டகாலம் தங்கியிருந்து தமிழ்ப் பணியும் சைவப்பணியும் புரிந்தவர், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரித் தாபகரும், சித்தன்கேணி வாசரும், நாவலர் சற்குருமணிமாலை பாடியவரும், நாவலராற் பெரிதும் பாராட்டப் பெற்றவருமான அம்பலவாண நாவலர் அவர்களாவர்.

அம்பலவாண நாவலர் அம்மடத்தில் இருந்து கொண்டே அகோர சிவாசாரியார்பத்ததி, நிர்மலமணி வியாக்கியானம் முதலிய சைவப்பெரு நூல்களை ஆராய்ந்து வெளியிட்டார்கள்.

ஞானப்பிரகாசர் திருக்குளத்தின் தென்மேற்கில் சிந்துபூந்துறை வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் சமாதி இடம்பெற்றுள்ளது. தென்பாகத்தில் திருக்காளத்தியூர் கண்கட்டி மறைஞானசம்பந்தர் சமாதி உள்ளது.



நாமகள் என்னும் திருவே!
நாங்கள் உன்னைப் பணிவோம்.
கலைமகள் என்னும் திருவே!
கல்வி நிறையத் தருவாய்
சரஸ்வதி என்னும் தேவி
சகல கலையும் தருவாய்
என்றும் உன்னைத் தொழுவோம்
எழுத்தும் எண்ணும் தருவாய்
பாலும் பழமும் படைப்போம்
பாட்டுப் பாடப் பணிப்பாய்
ஞானக் கொழுந்தே வணக்கம்
நல்லன யாவும் தருவாய்
தேவி உன்னைத் தொழுதோம்
திருந்திய வாழ்வு தருவாய்.

## திருப்திகரமான சேவை

எங்கள் நாற்றுமேடையில் உண்டாக்கப் பெற்ற பலவித செடி, கொடி, மரக்கன்றுகள் நாட்டின் வட பகுதியில் பல ஊர்களிலும் வேர் கொள்ளுமாறு பெரியவர்கள் உதவி செய்தமை எமக்குப் பெருமளவில் திருப்தியாயுள்ளது. நாங்கள் பசிய காட்சிக்காகவும், நறு நிழலுக்காகவும், விறகுக்காகவும், கால் நடைத்தீவனத்துக்காகவும், கனிவளத்துக்காகவும், பசும் பசளைக்காகவும் மரங்களை நட்டால் நமக்கு மழை வளமும் பெருகும். மரக்கன்றுகள்தருவதற்கு நாங்கள் ஆயத்தம் நீங்கள் ஆயத்தமா?

Milk White products are successful choice everywhere.

## தமிழ்மலர் தொடுத்த தாதா

இலங்கை அரசாங்கம் தமிழ் பேசும் குழந்தைகளுக்கு இருபது ஆண்டுகளுக்கு முன் விநியோகித்த தமிழ்மலர் வாசகத்தொடர்கள் தரமானவை. தமிழ்மலர் நூல்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திலிருந்து வெளி வருவதற்குமுன், யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரி மேல்மாடியில் பாடநூற் சபையினரால் தயாரிக்கப் பெற்றவை.

பாடநூற்சபையில் அரங்கேறிய பெரியவர்கள் வரிசையில் மு. ஞானப்பிரகாசம், வித்துவான் கார்த்திகேயன், பொன். முத்துக்குமாரன், பண்டித நடராசன், சி. சிவகுருநாதன், எம். ஏ, வித்துவான் வேந்தனர், பரநிருபசிங்கம் பி. எஸ். சி. சைவப்புலவர் செல்லத்துரை, ஓவியக்காரன் இராசரத்தினம், ஜனுப் நசாக், க. சி. குலரத்தினம் பணிபுரிந்தனர். இவர்களுக்கு அன்றைய அடிப் படைச்சம்பளத்தில் மூன்றிலொரு தொகை மேலதிகமாக வழங்கப்பெற்றது.


வேலைகள் யாவும் வெகுவேகமாக நடைபெற்றபோது அமைதியே உருவான ஒருவர் மேற்பார்வையாளராய் வருவதும் போவதுமாக இல்லாமல், எல்லோருடனும் கண்ணியமாகப் பழகி, அன்பாகப் பேசி, அது இப்படியிருந்தால் எப்படியிருக்கும், இதை இன்னுரிடம் கேட்டுப் பார்ப்போம் வாருங்கள் என்று தமது காரில் எம்மை ஏற்றிச் சென்று, உறுதுணையாயிருந்தவர் அவர். திணைக்களம் போல நிலவிய இடத்தில் சிவப்புக்கோடு இடப் படாமலே, கடுகடுப்பில்லாமலே, புன்சிரிப்போடு, கலகலப்பாக வேலைகள் நடைபெற்றன.

மேற்பார்வையாளர் சமயப்பிரச்சனைகள் பிரிவுகள் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவர். தமிழ்ப்பிரியர். நன்ருகத் தமிழறிந்தவர். சிந்தனையாளர், இரசிகர். பாடசாலைப்பரிசோதகர்.

அவர் வேறுயாருமல்லர் அன்பின் குழந்தையான அருள் ஐயா என அழைக்கப் பாத்திரராயிருந்த அருளையா அவர்களேதான். அருளையா இன்று அமரர்.

அருளையா பெரியார் பேராசிரியர் மாமேதை அலன் ஏபிரகாம் அவர்களின் மைந்தன். காரைநகரைச்சேர்ந்த கந்தப்பர் சுப்பிரமணியர் அம்பலவாணர் என்பார், தெல்லிப்பழையில் ஆசிரியப்பயிற்சி பெற்றபோது மதம் மாறி அலன் ஏபிரகாம் ஆனவர். பின்னர் வட்டுக் கோட்டையில் மேற்படிப்புப்படித்துக் கணிதம், விஞ்ஞானம், வானசாத்திரம் வல்லவராகிப் பேராசிரியரானவர். முன்னர் 1910 ஆம் ஆண்டில் காட்சி கொடுத்த ஹாலி வால்நட்சத்திரத்தைப் பற்றிய நுட்பமான தகவல்களை எவ்வித உபகரண வசதியுமின்றி உலகத்தவருக்கு உள்ளபடி கூறி உடனடியாக F. R. A. S பட்டம் பெற்ற வித்தகர்.

வித்தகர் ஏபிரகாம் பெற்ற அருளையா அவர்கள் தமிழ்மலர் தொடுத்த தாதா. தமிழ் தந்த தாதா. தமிழ் மலர் வரிசையில் அவர் பணி பெரிது. அவர் புகழ் வாழும். சாந்தி.




### பச்சைக் கீரை
(சீதா - தமிழ்நாடு)

1. பச்சைக் கீரை வாங்குவீர்
பருப்புப் போட்டு மசிக்கலாம்
வடைகள் செய்ய ஏற்றது
வளரும் பச்சைக் கீரைகள்.

2. பற்கள் எலும்பு வளர்ந்திடப்
பசுமைக் கீரை நல்லது.
விற்கும் விலையிற் குறைந்தது
விரைவிற் சமைக்கத் தகுந்தது.

3. பல்லில் லாத கிழவரும்
பல்லு முளைக்கும் சிறுவரும்
எல்லா வயதுக் காரரும்
இனிதாய் உண்பர் கீரையை.

### சுதந்திர சிலை கண்ணீர் வடிக்கிறது

அமெரிக்காவில் நிறுவப்பெற்ற சுதந்திர சிலை கண்ணீர் வடிக்கும் என்று முக்காலமும் அறிந்த முத்துசுவாமி சோதிடர் கூறுகிருர். ஏழைகள், வறியவர், வாழ்வற்ருேர், வசதியற்ருேர் யாவருக்கும் வாழ்வளிப்பேன் என்று கூறி நிமிர்ந்துநின்ற சிலை இன்று வெட்கப்படுகிறது. அமெரிக்க அதிகாரிகள் சின்னஞ்சிறிய நாடுகளில் பென்னம்பெரிய பிழைகளைச் செய்கிருர்கள் என்று கேள்விப்பட்ட சிலை உருகிக் கண்ணீர் வடிக்கிறது.

### அச்சத்தையும் வெறுப்பையும் அறியாதவர்


இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுப்பதை முழுமூச்சாக எதிர்த்த சேர்ச்சில், நேருவின் பெருமையை மறைக்க முடியாமல், “அவர் அச்சத்தையும் வெறுப்பையும் அறியாதவர்” என்று போற்றினுர். அச்சமும் வெறுப்பும் ஒருவரின் ஆளுமையைத் தேய்த்து, ஆளையே விழுத்திவிடும். நீண்டகாலம் வாழ்ந்து, பெரிய மகா யுத்தத்திலே பிரித்தானியாவுக்கு வெற்றியீட்டிக் கொடுத்து, ஆங்கில மொழியை வளர்த்த அந்தப் பெரிய சேர்ச்சில் பட்டார். அவர் மீண்டும் தளிர்விட்டு வந்த போது பிரித்தானிய பேரரசு பொதுநல அமைப்பு நாடுகளாய்ப் பிரிந்துபோயிற்று.

★ எத்திசையும் புகழ்மணக்க இருந்த தமிழ்மொழி ★


**யோகாசனம்:**

# சர்வாங்காசனம்

தோல்வியாதிகள், மேகவியாதி காக்காய் வலிப்பு, வெட்டை, காசம், நீரிழிவு, மூலநோய், மலச்சிக்கல், சமியாக்குணம் மலேரியா முதலியன பலவாயும் ஒன்ருயும் சிலரை வருத்தும்போது இயற்கையாக நோயை நீக்கு வதற்கு இறைவன் வைத்தியநாதனுய் எழுந்தருளி முனி வர்கள் யோகியர்களுக்கு அருள் செய்துள்ளார். ஒரு காகிதத் துண்டைக் கையிற் பிடித்துப் படிப்பதற்குள் கைகள் படபடவென நடுங்க மிருதங்கம் வாசித்தாற் போல உதறியவர்கள், யோகாசனஞ்செய்து, சுத்தநீர் பருகி உடலுறுதி, மனவுறுதி பெற்றதோடு, மனிதராகவும் மாறியுள்ளார்கள். அஃதாவது நித்திரையில் விந்து வெளி யேறுதல், இனப்பெருக்க உறுப்புக்களின் நோய்கள் இவற்றையெல்லாம் சர்வாங்காசனம் எளிதில் நீக்கியுள் ளது என்று நிபுணர்கள் சாட்சி பகருகிருர்கள். இன்னும் வாழ்வுக்கு இன்றியமையாத குருதியோட்டத்தின் மூலா தாரமான இருதயமும் உறுதியாகிறதாம். என்ன அற் புதம்! இளமை உண்டாகிறது, மலட்டுத்தன்மை நீங்கு கிறது, மனம் விரிகிறது, கோணல் மனமும் குறுகிய நோக்கும் போய் மறைகின்றன. மனிதத்தன்மை மாசற மலர்கிறது சர்வாங்காசனம் என்னும் எல்லா உறுப்பு ஆசனத்தால். இது சிறிதளவு சிரமமானதாயினும் சித்தம் இருந்தால் செயல் சுலபமாகும்.



நிலை 1



நிலை 2

## சர்வாங்காசனம் எப்படிச் செய்வது, எமனே வெருட்டிக் கலைப்பது?

எமனுர்க்கு ஏது வேலை எங்களிடம் என்று சித்தர்கள் கூறினுற்போல நாமும் கூறலாந்தானே!

கால்களை நீட்டி மல்லாந்து படுத்து, கைகளை உடம்பை ஒட்டிப் பக்கங்களில் வைக்கவும். இரு கால் களையும் தொடைகளையும் இடுப்பையும் முதுகையும் தூக்கி உயர்த்தி, தோள்களில் பலத்தை நிறுத்துக. நாடியை நெஞ்சில் அழுத்தி, இடுப்புகளை இரு கைகளாலும் தாங்கிக் கொள்க. நாடியானது நெஞ்சில் அழுத்தும் வகையை ஜலந்திரபந்தம் என்பர். இந்நிலையில் கழுத்தையடுத்த தோள் பாகமும் பிடரியும் நிலத்தில் உறுதியாக அமையும். இந்நிலையில் உடம்பை அங்குமிங்கும் ஆடவிடாமல் கவ னித்துக்கொள்க. கால்களை மிகவும் நேராக செங்குத் தாக ஒருங்குசேர்த்து நிமிர்ந்து நிற்கச்செய்க. உடம்பின் முழுப்பாரமும் தோளில் பொறுக்கவிட்ட நிலையில் சிறிது நேரம் நின்றபின், பதட்டமில்லாமல், மெதுவாகக் கால் களை இறக்கிப் பழைய நிலைக்குக் கொண்டுவருக. இந் நிலையில் நிற்கும்போது மூச்சை அமைதியாக அடக்கி, மெதுவாக விடுதல் வேண்டும். கால்களை இறக்கும்போது தலையை ஒருபோதும் உயர்த்தலாகாது. இதனுல் தொண் டைப் பகுதியில் உள்ள பரா, தைரூயிட் கோளங்கள் நல்லமுறையில் நெறிப்படும். காலை மாலை இதனைச் செய்பவரிடம் காலன் அணுகமாட்டான்.

# தமிழனுக்கு விஞ்ஞானக்கல்வி புதியதல்ல

மாலைப்பொழுதையடுத்து வரும் நேரத்தில் உணவுப் பண்டத்தை வெளியே கொண்டு போகும் போது ஒருகரிக் கட்டியும் அதனருகில் இடம்பெறும். மாதத்தில் மூன்று நாள்கள் மாதர் மூலையிற் குந்தும் போது கரிக்கோடு, பாக்குவெட்டி, இரும்புத்துண்டு ஏதாவது கூட இருக்கும். மாதர் நீராடும் போது மஞ்சள் பூசிக்கொள்வது எல்லாம் முற்காலத்துப் பெண்களே நன்கறிந்த கரியொரு தீயதை காரணமாகவேதான். அதை இரு தீயதையாக்கத் தமிழன் கடைப்பிடித்த குடிசைப்பழக்கம் அது.

அணுவின் அடர்த்தி, அணுவின் தேய்வு, வளர்ச்சி, அணுவை உடைத்தல் எல்லாம் கண்டவன் தமிழன். அமிலங்கள், காடிகள், காரங்கள், உப்புகள் யாவும் அவன் கண்டவை. சித்தன் கண்ட வைத்தியத்தில் ஆய்வு கூட அறிவு அத்தனையும் இடம் பெற்றன. ஸ்தெசஸ் கோப் நேற்று வந்தது. ஹார்வே பிரபு முந்தநாள் (1759) ஆண்டில் குருதியோடுவதைக் கண்டவர். தேரையர் முதலானேர் இரத்த ஓட்டத்தை நாடி பார்த்தறிந்து சொன்னதோடு நோய்களின் குறிகளையும் நாடிச் சொன் ஞர்கள். நோய் நீக்கும் மருந்துகளையும் உலோகங்கள், உப்புகள் தாவரப்பகுதிகள் கொண்டு தயாரித்தார்கள், வடிகட்டுதல், ஆவியாக்குதல், ஸ்படிகமாக்குதல் முதலிய இரசாயன செயல் முறைகளை அறிந்து மூலப்பொருள் கொண்டு உற்பத்திப் பொருள்களைப் பெருக்கினுர்கள். கலப்புப்பொருள்களில் மூலக்கூறுகளின் வீதாசார விபரத்தை அறிந்திருந்தார்கள்.

பனங்கட்டி, கல்லக்காரம் தயாரித்த கிழவிகள் கையெ ழுத்துப் போடவோ, அ, ஆ எழுதவோ தெரியாதவர் கள். பாணி தயாரானதை அறிவதற்கு இன்று பலவித மானிகளைக் கொண்டறிந்தும் தவறுதல் உண்டாகின்றது. பாணியைத் துளாவும்போது அகப்பையால் அள்ளி உயரமாக எடுத்து ஊற்றும்போது பதம் காணும் பாம ரரின் விஞ்ஞான அறிவு பெரிது.

எங்கள் பிள்ளைகள் விஞ்ஞானத்தில் விரைவாக முன்னேறி விவேகியாய் வந்துள்ளார்கள். இனி இளமை யிலேயே விஞ்ஞானக்கல்வி அவர்களுக்குப் பருத்தி புடைவையாய்ப் பயன் தருவது போலாகும். இரட்டிப்பு மகிழ்ச்சி பொங்குக.



# நற்குஞ்சரக் கன்று

எல்லாம்வல்ல பராசக்தி ஆன்மாக்களுக்குத் திருவருள் பாலித்தற்பொருட்டு முகஞ்செய்யும் முதல்நிலை ஓங்கார வடிவாகிய விநாயக மூர்த்தி. எனவே அம் மூர்த்தம் நற்குஞ்சரக்கன்று எனப் பெற்றது.

நல்ல யானைக்கன்றாகிய விநாயகப் பெருமானை அணுகினால் கலைகளும் ஞானமும் வருந்திக் கற்கவேண்டிய பண்டங்கள் அல்ல. அஃதாவது ஓங்கார மூர்த்தியின் திருவருள் வயப்படின் கலைஞானம் எளிதில் கைவரும்.

விநாயகப்பெருமான் ஓங்காரவொலியின் தூல வடிவினர், தூய திருமேனியினர். அவர் தேவகணம், பூதகணம் யாவற்றையும் விளக்குபவர்.

## திருவருட்பயன்

திருவருளுக்குப் பயன் சிவப்பிரகாசம், சிவப்பிரகாசத்துக்குப் பயன் சிவஞான சித்தி, சிவஞானசித்திக்குப் பயன் சிவஞான போதம்.

உயிர்கள் திருவருள் வழிநின்று, சிவம் பிரகாசிக்கப் பெற்று அதனால் சிவஞானம் சித்தித்து, சீவபோதம் கீழாக சிவபோதம் மேற்கொள்ளப்பாலன. இவ்வாற்றால் பிரகாசம், சித்தி, போதம் ஆகியவற்றுக்கு அத்திபாரம் திருவருட்பயன் என்பர்.

நற்குஞ்சரக் கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.

ஓங்கார மூர்த்திக்கு ஓம்பட்டு நிற்பவர்கள் உய்திதலைக் கூடியவர்கள்

ஓங்கார மூர்த்தியின் திருவருள் வழிப்படின் கலைஞானம் எளிதிற் கைவரும்.

அஃதாவது நல்ல யானை முகத்தையுடைய இளமையான விநாயகக் கடவுளை (ஒருவர்) மன,மொழி, மெய்களால் வழிபடின் (அவருக்கு) ஞானநூல்கள் வருந்திக்கற்க வேண்டிய பொருளாகமாட்டா.

### Invocation to Ganesha

For the One Who worships Ganesha, the art and philosophies are not things which he need labour to learn.

## மன்னிப்புக் கோருகிறோம்

இதற்கு முந்திய செய்தி இதழ்களில் யோகாசனம் சம்பந்தமான விளக்கக் கட்டுரைகள் இடம்பெறத் தவறிவிட்டன. இனிமேல் அவை ஒழுங்காக வெளிவரும் என்று கூறி மன்னிப்புக் கேட்டு நிற்கின்றோம்.

## திருப்தி

**ஒலிவர் வெண்டெல் ஹோம்ஸ்**

வெயிலும் மழையும், பனியும் காற்றும் என்னை வாட்டாமல் நான் என்னுடையது என்று திருப்தியோடு உறங்குவதற்கு ஒரு குடிசை எனக்குப்போதும்.

சாதாரண சத்துணவு மூன்றுவேளை உண்ண வேண்டும். எனக்குக் காசு, பணம், பொன் அதிகம் வேண்டாம். செலவுக்குப் போதியளவு கிடைத்தால் போதுமானது.

பட்டங்கள், பதக்கங்கள், பாராட்டுக்கள் பாவைப் பிள்ளைகள் போன்றவை. பட்டங்கள் வெறும் பெயர்கள். பதவி ஆசனங்கள் எனக்கு வேண்டாம்.

நகைகள், ஆபரணங்கள் எல்லாம் பாபத்தின் ஈட்டம். மோதிரம் அல்லது ஊசி! இதிலே ஒருகல் பொறித்தால் திருப்திக்குமேல் திருப்தி. அல்லது ஒரு முத்து. இவற்றின் மேல்எல்லாம் வெறும்பகட்டு.

## குண்டு போடுதல்

முற்காலத்தில் மாணக்கர் உலகில் குண்டு போடுதல் என்றால் பரீட்சையில் தவறுதல் என்பது பொருளாக வழங்கி வந்தது. இரண்டாம் மகாயுத்த காலத்தில் விமானங்கள் மேலிருந்து நச்சுப்புகை, வெடிகுண்டு, எரிகுண்டு வீசுதல் குண்டு போடுதலாயின. குண்டு போடுதலுக்கு இலக்கு அவதானம் வேண்டும். இன்று நாமெல்லோரும் குண்டு போடுகிற பொம்பரைக் கண்டிருக்கின்றோம்.

குண்டு வீசுதல், போடுதலுக்கு இடத்தைக் குறிப்பாக உன்னிப்பாக உணர்த்தல் ஒரு திறமை. குண்டுபோட வேண்டிய இடத்தைக் குறிக்கும் போது நோர்டன் என்பவரின் பெயர் Norden Bomb Sight என வழங்குகிறது. ஜேமனியிலும் யப்பானிலும் இந்த முறை கையாளப்பட்டது. இதைக் கண்டு காட்டியவர் கார்ள்நோடன் என்னும் யாவாக்காரனவன் (1880 – 1965) ஒல்லாந்தர் இனத்தவனான இவன் ஒல்லாந்திலும் ஜேமனியிலும் படித்தவன். பின்னர் சுவிற்சர்லாந்து சென்று தொழில் நுட்பம் பயின்றவன். பின்னர் அமெரிக்காவுக்குச் சென்று யுத்த தளபாடங்கள் தயாரித்து குண்டு வீசும் குறிப்பையும் கண்டு கொண்டவன். உயரத்திலிருந்து குண்டு போடுவதற்கு ஒரு வாய்ப்பாடு போல ஒரு அளவை அவன் கண்ட அணுகுமுறை.

## ஆர்வம் உண்டேல் ஆற்றல் வளரும்

எங்கள் தமிழ் என்னும் அபிமானங்காரணமாக உங்களுக்கு அதில் ஆர்வம் இருந்தால், நீங்கள் அதில் ஆற்றல் பெறுவதற்கு இலகுவான அணுகுமுறை, நாவலர் பாடசாலையில், அல்லது நல்லை ஆதீனத்தில் நடைபெறும் பிரவேச, பாலபண்டித வகுப்புக்களிற் சேர்ந்து படிப்பதாகும்.

★ மூவாத வாடாத முதுமைத் தமிழ்மொழி ★

# அவர் பார்த்த தொழில்கள் மிகவதிகம் அந்தக் கொடியின் பூக்கள் பலவர்ணம்

பிரான்ஸ் நாட்டில் ஒரு சட்டத்தரணியின் மைந்தனாக 1729 இல் தோன்றிய அவர், சட்டத்தரணி, விஞ்ஞான மேதை, கணித நிபுணன், படைத்தலைவன். இவ்வாறாக ஏழாண்டு யுத்தத்தில் ஆங்கிலேயர் கனடாவைப் பிடித்த 1763 ஆம் ஆண்டுக்காலத்தில் பிரான்சியத் தளபதி மொன்காம் என்னும் வீரனையடுத்துத் தளபதியாயினார். பின்னர் அரசதூதுவராகி லண்டனில் வாழ்ந்தார். பின்னர் மாலுமியாகிக் கடல்கள் கடந்து, நாடுகள் கண்டார். பின்னர் அரசியலிற் பிரவேசித்து நெப்போலியன் காலத்தில் மேற் சபைப் பிரதிநிதியாயிருந்து பெரும்பணிபுரிந்து பதவியு யர்வு பெற்றார். இவ்வாறாக தென்னமெரிக்காவில் ஆஜென்ரினா நாட்டருகில் போக்லாந்து தீவுகளில் கன டாப் பிரெஞ்சுக்காரரைக் குடியேறச் செய்தார். தென் கடல் பிரதேச மெங்கும் சென்று தென்பசுபிக் பகுதியை யும் கண்டார். அங்கேயுள்ள சொலமன் தீவுகளில் பெரி யது போகன்வில்லா. அத்தீவு லூயி. த. போகன்வில்லா என்னும் அதிமனிதன் பெயரால் வழங்குவதோடு, இன்று கொட்டில், குடில் மாடமாளிகை கூட கோபுர வளவெங் கும் வேலியோரம் மதிலோரம் எங்கும் பல நிறங்களில் வாடாமல் வதங்காமல் அழகாகப் பூத்து நிற்பதும் போகன் வில்லா. போகன்வில்லாக் கொடியின் பூவின் நிறங்கள் நூற்றுக்கணக்காக உள்ளன. எண்ணிப்பாருங்கள் மட்டக் களப்பில் கல்லடி உப்போடை இராமகிருஷ்ண மடத் தடியில் ஏறக்குறையஐம்பது நிறங்களில் அது மலர்ந்தது. புயலுக்குப் பின்குறைந்திருக்கலாம்.

## பழுத்த அனுபவம்

கேடிலாத திருக்கேதீசுரத்தில் அடியார்கள் நீங்காது உறைதல் வேண்டும். அந்தக் காலத்தில் மனித சஞ்சார மில்லாத வேளையில் மாவிட்டபுரத்துப் பழைய சபாரத் தினக் குருக்கள், அவரின் பின் இந்திரக்குருக்கள், இவரின் மருமகன் முதலானோர் பூசை செய்த சிறப்பு. எப்போ தாயினும் வெள்ளிக்கிழமைகளில் அயலூர்களிலிருந்து இருவர் மூவர் வந்து வணங்கிப்போவது வழக்கம்.

சபாரத்தினம் சுவாமி அங்கே மடம் கட்டியவர். திரு முறைகளில் நல்ல ஈடுபாடு கொண்டவர். திருவாசகம் முழுவதும் மனப்பாடமானவர். எதற்கெடுத்தாலும் திரு வாசகத்தில் உதாரணம் காட்டி மனமுருகிப் பாடுபவர். அப்பன் சொன்னான் என்று கண்ணீர் விடுபவர்.

திருமுறைகளை நன்றாகப் படித்துத் தாடனமான பின் சைவ சித்தாந்தம் படித்தால் நன்றாக விளங்கும் என்பர். சமய குரவருக்கு முதல் வணக்கம் செய்தல் வேண்டும். சமய குரவர் மூலம் சந்தானகுரவரை அறிதல் வேண்டும்.

சித்தாந்தம் நன்றாக வந்த பின் வேதாந்தம் பயில்வது வெகு சுலபம் என்பவர். திருமுறைகளில் வெளிக்கருத் தின் வேறாய் உட்கருத்து நிறையவுண்டு. அந்த உட் கருத்தே ஆத்மானுபவத்துக்குரியது. அதை அறிய முற் படுதல் வேண்டும். பிறவி எடுத்ததன் நோக்கம் ஆன்ம ஈடேற்றம் என்பதை மறந்து போதலாகாது.

சுவாமிகள் விரைவில் திருக்கேதீஸ்வரம் போகவிருக் கிறார். போகும் போது ஒரு சில அடியார்களை அழைத்துப் போவதற்கு ஆயத்தஞ் செய்கிறார். திருக்கேதீசுவரம் பாம்பு பூசித்த தலம் என்பதற்கு இன்றும் அங்கே சான்றுகள் நிறைய உள்ளன. முன்னர் தாம் அங்கே திருக் கோயிற் பணிகள் பலவும் செய்து வந்தபோது, ஒரு சமயம் மணியடித்துக்கொண்டு நின்ற போது, மேலேயிருந்து பெரிய பாம்பு ஒன்று தமது தோளில் மாலை போல விழுந்து தொங்கியதாம். அதன் பின் தமக்கு பாம்பின் அச்சம் நீங்கியதாம். மில்க்வைற் தொழிலதிபரைப் பற்றிய பேச்சுவந்த போது, தொழிலதிபர் செய்யும் பணி கள் மகத்தானவை. இவர் இன்னும் சைவப் பணிகள் பரவலாகச் செய்தல் வேண்டும். இன்னும் ஆன்மார்த்த மாகப் பெரும் பணி செய்ய வேண்டும். இவர் வைத்த மரங்கள் நன்றாக வளர்ந்து பயன் தரவேண்டும். அவரை "நீயார்" என்று கேட்கிறேன். இறைவனே அவர் மூலம் செய்கிறார் என்பது அவருக்கு விளங்குமா?" என்று தம்மைக் கேட்டார். இன்னும் தெய்வகாரியங்களை மேலதி கமாக எழுதுங்கள் என்று வாழ்த்தித் திருநீறு தந்தார்.

## பசுக்களுக்குக் கௌரவம்

தமிழர்சால்பைப் பற்றி எழுதுவதும், பேசுவதும், படிப்பதும் போதாது. அதை நடைமுறைப்படுத்தல் வேண்டும். ஆசாரசீலமுள்ள சால்பினர் வழிநடையின் போது, வழி விலகிக்கொடுக்கவேண்டியவர்கள் வரிசை யில் பசுக்களும் இடம்பெற்றுள்ளன.

தவ முனிவர்கள், பண்பிற் சிறந்தவர்கள், பெண்கள், சுமைதாங்கி வருபவர்கள், சிறுவர், நோயாளிகள் எதி ரில் வந்தால் வழிப்போக்கர் வழி விலகிக்கொடுக்க வேண்டும். இவ்வாறே பசுக்கள் வந்தால் வழிவிலகிக் கொடுத்தல் வேண்டும். பசுக்கள் போனபின்பே பண் புடையவர்கள் போவார்கள்.

## ஏன் இந்த அகால மரணம்

மனிதன் நாள்தோறும் உருக்குலைந்து அகால மரண மடைவதன் காரணங்களுள் ஒன்று, புகைபிடித்தல். பீடியாயினும், சிகரெட்டாயினும், சுருட்டாயினும், சுங் கானாயினும் எல்லாம் புகையிலைதான். கண்புகைந்து நெஞ்சுலர்ந்து, கைகால் அயர்ந்து, சோர்ந்து, மெலிந்து வருந்தி ஏன் இறக்கிறார்கள்? புகைப்பதனால்.

உலகில் வருடந்தோறும் பத்துலட்சம் மக்கள் புகை யினால் அகாலமரணம் அடைகிறார்கள் என்று W. H. O. என்னும் உலக சுகாதார நிறுவனம் உறுதியாகக் கூறு கிறது. ஒவ்வொரு ஆண்டும் ஆறுலட்சம் மக்கள் நுரை யீரலில் புற்றுநோய்த் தாக்கத்துக்கு ஆளாகிறார்கள்.

## மாமிசம் உண்டால் மரணதண்டனை

ரியூடர் வம்சத்து எட்டாவது எட்வேட் மன்னர் காலத்தில் 1539 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் வெள்ளிக் கிழமையில் இறைச்சி தின்றவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

## 1987 பெப்ருவரி மாத நிகழ்ச்சிகள்
### (தை 19 முதல் மாசி 16 வரை)

| | | | |
|---|---|---|---|
| 1. | ஞாயிறு | ... | பம்மல் சம்பந்தமுதலியார் தினம் |
| 2. | திங்கள் | ... | சதுர்த்தி விரதம் |
| 3. | செவ்வாய் | ... | மாவிட்டபுரம் லட்சார்ச்சனை ஆரம்பம் |
| | | | அண்ணுத்துரை நினைவு தினம் |
| | | | பி. கிருஷ்ணபிள்ளை நினைவு தினம் |
| 4. | புதன் | ... | முன்னேஸ்வரம் கொடி |
| | | | விடுமுறைநாள் |
| 5. | வியாழன் | ... | பகல் 1-58 அட்டமி |
| 6. | வெள்ளி | ... | அட்டமி - நவமி |
| | | | கார்த்திகை விரதம் |
| 7. | சனி | ... | நவமி பகல் 4-19 வரை |
| 9. | திங்கள் | ... | ஏகாதசி விரதம் |
| 10. | செவ்வாய் | ... | விஞ்ஞானி விஸ்ரர் நினைவு |
| 11. | புதன் | ... | பிரதோஷ விரதம் |
| 12. | வியாழன் | ... | தைப்பூசம் |
| | | | முன்னேஸ்வரம் தேர் |
| | | | மாவிட்டபுரம் அர்ச்சனை நிறைவு |
| | | | நல்லை ஆதீன முதற்குரு தினம் |
| | | | ஏபிரகாம் லிங்கன் நினைவு |
| 13. | வெள்ளி | ... | பூரணை விரதம் |
| | | | நகுலேஸ்வரம் கொடி |
| | | | தமிழ் மாசி முதல்நாள் |
| | | | விடுமுறை நாள் |
| 15. | ஞாயிறு | ... | விஞ்ஞானி கலிலியோ நினைவு |
| 16. | திங்கள் | ... | திருவள்ளுவர் உத்தரநாள் |
| 18. | புதன் | ... | இராமேஸ்வரம் கொடி |
| 19. | வியாழன் | ... | உ. வே. சாமிநாதஐயர் நினைவு |
| 20. | வெள்ளி | ... | அட்டமி இரவு 12-32 மேல் |
| 21. | சனி | ... | அட்டமி - நவமி |
| 22. | ஞாயிறு | ... | வி. கனகசபைப்பிள்ளை நினைவு |
| 24. | செவ்வாய் | ... | ஏகாதசி விரதம் |
| 25. | புதன் | ... | பிரதோஷவிரதம் |
| 26. | வியாழன் | ... | மகா சிவராத்திரி |
| | | | நகுலேஸ்வரம் தேர் |
| | | | விடுமுறை நாள் |
| 27. | வெள்ளி | ... | அமாவாசை விரதம் |
| 28. | சனி | ... | இராசேந்திரபிரசாத் நினைவு |

### பேரரசு பஞ்சாய்ப் பறந்தது

ஸ்பானிய பேரரசு ஆசிய நாடுகளை உருக்குலைத்தது. பிலிப்பீன்ஸ் தேசத்து அக்குயினுல்டோ புரட்சித் தலைவராய்ப் புறப்பட்டு அந்த அதிகாரக் கும்பலை மண் கௌவச் செய்தார்.

### அண்மையில் தமிழிசை வளர்த்தவர்

அண்மையில் அருணுசலக் கவிராயர், முத்துத்தாண்டவர், ஆனைஐயா, மழவை சிதம்பரபாரதி, கவிகுஞ்சர பாரதி, இராமசாமி சிவன், கோபாலகிருஷ்ணபாரதி, வேதநாயகம்பிள்ளை, அண்ணுமலைரெட்டியார், மாரிமுத்தாபிள்ளை, இராமலிங்க அடிகள்.

## இலங்கை-இந்திய இனத்துவக் காதை

முப்பத்துமூன்று ஆண்டுகளுக்கு முன் கட்டைவேலியூர் பண்டிதர் ஜே. எஸ். ஆழ்வாப்பிள்ளை அவர்களை அதிபராகக்கொண்டு வெளிவந்த தேசத்தொண்டன் என்னும் மாதாந்த சஞ்சிகையில் வெளிவந்த பாடல்களில் 31, 32, 33 ஆகிய மூன்று பாடல்கள் கிடைத்துள்ளன. உறவினன் என்னும் புனைபெயரில் வந்த இவை பழைய சம்பந்தத்தை வற்புறுத்துகின்றன.

தாயொடு பிள்ளைபோலச் சனசமூ கத்துவாழ்க்கை
நேயராய்ப் பெண்கொடுத்தும் நிரந்தரம் வாங்கல்செய்தும்
ஆயமா யளவளாவி யன்றுதொட் டின்றுகாறும்
தீயன வெவையுமின்றித் திகழ்ந்தன பரதமீழம்.

கன்றினுக் கிரங்கியூட்டும் கறவையைப் போலவுப்போ
டொன்றிய நாலெட்டென்ன வுரைநடைப் பரிகாரங்கள்
தென்றிசை நாவாய்மீதுஞ் செறிபுகை வண்டியூடுந்
துன்றிடவீழஞ் சேர்த்துத் துணைத்தது பரதநாடே!

புத்தனின் மதமென்றீழம் போற்றிடு மதமுமந்தப்
புத்தனின் பிறந்தநாடும் புத்தத்வ மளித்தநாடும்
புத்தயாத் திரிகட்கெல்லாம் புகலிடமளித்த நாடும்
நித்தமு மூலகம்போற்று நெடும்புகழ்ப் பரதநாடே!

### அசையும் விரல்களின் அமைதியான பேச்சு

விரல்களின் அசைவில் உண்டாகும் பாவனைகளின் தொகை தனியாகவும், கூட்டாகவும் நாலாயிரத்துக்கும் அதிகமானவை என்று நட்டுவாங்கம் வல்லார் கணக்கிட்டுள்ளார். பரதநாட்டியம் பார்த்திருப்போரைப் பரவசப்படுத்துவதோடு பாஷையின்றிக் கதை சொல்லவல்லதான அழகுக்கலை. பரதம் வல்லாரின் உச்சி தொடக்கம் உள்ளங்கால் வரை பேசும் அவரின் உளக்கருத்து நாவசையாமல் வெளிப்படும், உலகம் சுற்றிவந்த இந்திராணி உலகநாடுகளில் மக்களைப் பரவசப்படுத்திய அபிநயங்கள் பரதக்கலைக்குப் பழைமையானவை. சிவபெருமான் நடராச மூர்த்தத்தில் ஆடியசைந்தபோது அவரின் செங்கண் ஆயிரம் திருக்குறிப்புகளை வெளிப்படுத்தின என்று சமணத்துறவியாய இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

### காலம் செய்யும் வேலை

காலம் என்பது ஒரு தத்துவம். காலம் மாறி இறந்தகாலம் எனப் போனுலும் அதன்வழி நிகழ்காலம், எதிர்காலம் உளவாகின்றன. காலப்போக்கில் சிறுத்தன பெருக்கும், பெருத்தன சிறுக்கும், தோன்றின மறையும், மறைந்தன தோன்றும், புணர்ந்தன பிரியும், பிரிந்தன புணரும். என்னே காலதத்துவத்தின் உண்மை. நேற்றுச் சுண்டங்காய் இன்று பூசினிக்காயாகிவிட்டது. பரவாயில்லை.

### கல்விக்குச் செலவு

இந்திய நாட்டில் சென்ற வருடம் 6000 கோடி ரூபா கல்வியின்பொருட்டுச் செலவிடப் பெற்றது. அது மக்களுக்கு வாய்த்த பெரும் பேறு.

★ வானத்தின் ஒளிவிளக்காய் வையகத்துக்கேற்ற மொழி ★

## எம்மை ஆளும் ஒன்பதின்மரும் அவர்கள் உவக்கும் நவமணிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | புதன் | — மரகதம் | — Emerald |
| 2. | சுக்கிரன் | — வைரம் | — Diamond |
| 3. | சந்திரன் | — முத்து | — Pearl |
| 4. | குரு | — புஷ்பராகம் | — Topaz |
| 5. | சூரியன் | — மாணிக்கம் | — Ruby |
| 6. | செவ்வாய் | — பவளம் | — Coral |
| 7. | கேது | — வைடூரியம் | — Cat's Eye |
| 8. | சனி | — நீலம் | — Saphire |
| 9. | ராகு | — கோமேதகம் | — Cinnamon |

## பஞ்சசீலத்துக்கு முப்பத்தொன்று முடிந்தது

ஐக்கிய நாடுகள் சபையில் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் சித்திரை 26ந் திகதி கூடித் தங்கள் பஞ்சசீலத்தை நினைந்து போவது வழக்கம். பஞ்சசீலம் கண்டு 31 ஆண்டுகள் முடிந்துவிட்டன. சில நாடுகளில் பஞ்சசீலத்துக்கு இன்னும் விடியல்பொழுதாயினும் உண்டாகவில்லை. என்று தான் சீலம் தித்திக்குமோ?

## அழகான உலகம்

என்ன அழகு, என்ன ஆனந்தம், என்ன அற்புதம், உலகத்தை உற்று நோக்கும்போது, அது எம்முடன் பேசாது மௌனமாய் இருக்கிறது. நான்கு பருவகாலங்கள் எழுதாச் சட்டத்துக்கு அமைந்து வந்து பயனுதவிப் போகின்றன. அவை எம்மோடு உரையாடுவதில்லை. படைத்தல் என்பதுவும் ஒரு அமைதிப் பிரமாணத்தின் பாற்பட்டது. அதுவும் வாய்திறந்து பேசுவதில்லை.

— பழம் பாடல்

## இவைபோல வேறு சந்தர்ப்பங்களில் வழங்குவன

| | |
|---|---|
| மெத்தவாயிருக்கிறது | — இல்லை |
| மிஞ்சிவிட்டது | — செலவாயிற்று |
| மங்களவாரம் | — செவ்வாய்க்கிழமை |
| செல்வம் | — வறுக்கை |
| குருவாரம் | — வியாழக்கிழமை |
| பெரியவள் | — மூதேவி |
| ஏழரைநாட்டான் | — சனியன் |
| மஞ்சள் இழந்தாள் | — கணவனை இழந்தாள் |
| நல்குரவு | — வறுமை |
| குளிரவைத்தான் | — அணைத்தான் |
| தென்திசைக்கோன் | — யமன் |
| மெய் | — பொய்யான உடல் |
| நடுவன் | — யமன் |

No Washing is complete without
**MILK WHITE BLUE SOAP**

## தமிழே, எங்கள் தாயே வாழ்க!

உலகந்தோன்றியவுடன் பிறந்த தாயே எங்கள் தமிழே நீ வாழ்க! உன் மக்கள் சிலர் சிலகாலம் உணர்ச்சியின்றி ஊமையராயிருந்தார்கள். அவர்களின் பிள்ளைகள் இன்று உணர்ச்சிப்பெருக்கால் உதட்டைப் பிழந்து அம்மா தாயே என்று உன்னைப்பாடுகிறார்கள், பணிகிறார்கள், போற்றுகிறார்கள், உனக்காக உயிரைவிடுகிறார்கள்.

நீ உதட்டில் பிறந்த ஒலியானாலும் உள்ளத்துக்கு ஒளிவிளக்கு. நீ பெருஞ் சுடர்விளக்கு. நீ மங்காத மாசுபடாத மணிவிளக்கு. எழுத்தாகி, சொல்லாகி, பொருளாகி மலர்ந்து காய்த்துக் கனிந்த பழம். உயிராகி, மெய்யாகி உயிர்மெய்யாகி, மெல்லெழுத்தாகி, இடையெழுத்தாகி, வல்லெழுத்தாகி, குற்றெழுத்தாகி, நெட்டெழுத்தாகி நின்று நிலைக்கும் அமுதம். "எங்கள் வாழ்வும், எங்கள் வளமும், மங்காத தமிழ்" என்று சங்கு ஊதினான் உன் மகன் ஒருவன். "இருந்தமிழே உன்னால் இருந்தேன், இமையோர் விருந்தமிழ்தமென்றாலும் வேண்டேன்" என்றான் மற்றொருவன். நீ கடவுளைக் கண்டவன். கடவுள் தமிழோடிசையானவன், முத்தமிழுமானவன், தமிழன் என்றெல்லாம் திருமுறையாசிரியர்கள் போற்றத் திருப்புகழாசிரியரும் புகலரியதான தமிழ் என்று போற்றியுள்ளார். "இக்கொழி தமிழ்ப்பெருமை யாரறிவார்" என்று குமரகுருபரர் பாடியுள்ளார். "தேனுறை தமிழ்" என்று கல்லாடர் பாடுகிறார். "வாலையாம் தமிழ்ப்பூஞ்செல்வி" என்று புலவர்கள் போற்ற, உனக்குப் பின் கடவுளரும் பின்தொடர்ந்து வந்ததைப் புலவன் ஒருவன் கண்ணாரக் கண்டு பாடியுள்ளான். வண்டமிழ் பயில்வோர் பின்திரிகின்றவன் இறைவனாயின் தன்னேரில்லாத தமிழ் என்பதில் வியப்பு இல்லை.

மூன்றெழுத்தான நீ வல்லவள் மெல்லியவள், இடையவள், இயலினள், இசையினள், நாடகத்தாள். உன்னை உலகத்தவர் இன்தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், தண்டமிழ், கோதில்தமிழ், தென்தமிழ், தேன்தமிழ், நறுந்தமிழ், சங்கத்தமிழ் என்றெல்லாம் போற்றினர். நீ வாழ்வாயாக!

## பதினொரு அம்சத்திட்டம்

கீழ்க்கரவை இந்து இளைஞர் மன்றம் 'வளர்மதி' கரவெட்டியை மையமாகக்கொண்டு பன்முகப் பணி புரிவதற்குப் பதினொரு அம்சத்திட்டம் தயாரித்து நல்ல சேவை செய்கிறார்கள். ஆலயங்களை மையங்களாகக் கொண்டு செய்யும் சமயப்பணி, மன்றங்கள் அமைத்து நூலகப்பணி முதலியன அவர்களின் சேவைகளில் ஒரு பகுதி. அவர்களுக்கு மில்க்வைற் தொழிலதிபர் நல்ல உதவி.

## தலையாய தமிழன் ஒருவன்

ஐக்கியநாடுகள் சபையின் ஆசிய தூரகிழக்கு நாடுகளின் பொருளாதார மேம்பாட்டுச் சபையின் முதற் செயலாளர் யாவர் என்றால் பி. எஸ். லோகநாதன்.

★ நல்லுலகை உருவாக்கும் நல்ல தமிழ் மொழி ★

## நீர்வேலிப் பிரஜைகள் குழு

அகதிகளாய் வந்தவர்களுக்குப் புகலிடம் கொடுத்து வாழவைக்கும் இவர்கள் அன்று மில்க்வைற் தொழிலதிபரை வரவேற்று உபகரிப்புகள் செய்வதற்குச் சந்தர்ப்பங் கொடுத்தனர்.

## அமங்கலத்தை மங்கலமாகக் கூறல்

நெடுந்துயில் கொண்டான், காலை நீட்டினான், நடேசன் ஓலை வாங்கினான், சோற்றை மறந்தான், பரலோகமுற்றான், இறைவனடி சேர்ந்தான், பரமபதமுற்றான், பொன்னுலகடைந்தான், காலமாயினான், ஆவி துறந்தான், தன்னிலை சார்ந்தான், சாயுச்சியம் உற்றான். இவை யாவும் ஒருவன் இறந்தான் என்பதைக் குறிப்பனவாகும்.

# Learn your English

## Give one word for each group

1. To play unfairly
2. Costing nothing
3. A small land and water creature
4. To join together
5. A time of merry making
6. To open the mouth wide
7. Pull with force
8. To carry goods for sale
9. To make healthy
10. The back part of the foot
11. A flock of animals of one kind
12. Anything said to raise a laugh
13. To hit with the foot
14. Unable to walk
15. The solid portion of the earth

| | | | |
|---|---|---|---|
| 1. Foul | 2. Free | 3. Frog | 4. Fuse |
| 5. Gala | 6. Gape | 7. Haul | 8. Hawk |
| 9. Heal | 10. Heel | 11. Herd | 12. Joke |
| 13. Hick | 14. Lame | | 15. Land |

சிக்கன சலவை செய்வதற்கு வழி




மில்க்வைற் பார் சோப்

இதன் இரண்டு மேலுறைகள் அனுப்பினால் மில்க்வைற் செய்தி இலவசமாக அனுப்புவோம்.

## லண்டனில் பொங்கல் விழா

தமிழ்நாட்டில் பொங்கலின் முதல்நாள், பொங்கல் நாள், மாட்டுப்பொங்கல் நாள், அடுத்தநாள் காணும் பொங்கல்நாள். எல்லாமாக நான்கு நாள்கள் விழா மயமாயிருக்கும். இந்தப் பண்டிகை, சீமை என்னும் லண்டனில் சைவமுன்னேற்றச் சங்கத்தாரால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. தமிழர் திருநாள் உலகமெங்கும் பரவும் வகை இருந்தவாறு.

## பவளவிழா

யாழ்ப்பாணம் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் வை. எம். எச். ஏ. எழுபத்தைந்து ஆண்டுகள் சேவை செய்த சிறப்பைக் கருதித் தொழிலதிபர் கனகராசா அவர்கள் பாராட்டியுள்ளார். அங்கே அவர் தமது தாயார் மீனாட்சிப்பிள்ளை நினைவாகத் தண்ணீர் தாங்கும் தொட்டியமைத்துள்ளார்.

## நூலகம் என்பது தேவகுலம்

நூலகம் என்பது தேவகுலம். அஃதாவது ஆலயம். நூலகத்தைக் கோயிலாகவே கருதவேண்டும் என்று கொக்குவில் நூல்நிலையத்தில் தொழிலதிபர் உரையாற்றினார். புகைத்தலை விடுத்தால் தேகசுகம் மிஞ்சும், பணமும் மிஞ்சும். மிஞ்சிய பணத்தைக்கொண்டு நல்ல நூல்களை வாங்கி ஆறுதலாகப் படித்தறியலாம் என்றார். நூலகத்தில் கலந்துரையாடல், கருத்தரங்கு நடத்திக் கருத்துப்பரிமாறலாம் என்றார்.

## ஆதீனத்தில் பொங்கல் விழா

நல்லை ஆதீனத்தில் பொங்கல் நாளில் மாலைநேர விழா விறுவிறுப்பாக நடைபெற்றது. அயலில் உள்ள குழந்தைகள் பெரிய சமயஞானக் கருத்துக்களை நாடக அங்கங்களாக நடித்துத் தெரிவித்தார்கள். இவையாவும் மகாசந்நிதானம் அவர்களின் தனிமுயற்சி. இவற்றிற் பங்குபற்றிப் பிள்ளைகளைப் பாராட்டி ஊக்கப்படுத்திய தொழிலதிபர், இந்நாடகங்களில் நடித்த, நாடகங்களைப் பார்த்த குழந்தைகளுக்கு நல்ல அநுபவஞானம் உண்டாகும் என்றார். ஆயிரம்வாய்ச் சொல்லிலும் பார்க்க நாடக அங்கம் ஒன்று சிறந்தது என்று சுத்தானந்த அடிகளார் சொன்னவற்றை நினைவுபடுத்தினார்.

## கட்டைவேலி – நெல்லியடி

அரசாங்கச் சார்பற்ற முறையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தார் செய்த, செய்து வருகின்ற மகத்தான தொண்டுகளில் மரம்நாட்டும்பணி பரவலாகப் பயன் உள்ளதாக அமைந்துள்ளது என்று உரையாற்றியதோடு, வேண்டியளவு மரக்கன்றுகளையும் விதைகளையும் தொழிலதிபர் கனகராசா அவர்கள் உதவி ஊக்கப்படுத்தினார்.

## இறைவன் ஆடியருளிய அம்பலங்கள்

| | | |
|---|---|---|
| சிதம்பரம் | — | கனகசபை |
| மதுரை | ... | இரசிதசபை |
| திருவாலங்காடு | ... | இரத்தினசபை |
| திருக்குற்றாலம் | ... | சித்திரசபை |
| திருநெல்வேலி | ... | தாமிரசபை |

★ மோனத்தின் முளைத்தெழுந்த முத்தமிழ் மொழி ★

# உங்களுக்குத் தெரியுமா?

(விடைகள் வேறிடத்தில்)

1. உயிர் வாழ்வனவுக்கும் சூழலுக்குமுள்ள தொடர் பிணைப்பற்றிய கலை.
2. சுல்ரானு என்னும் வற்றலாகும் பழம்
3. தொங்குதோட்டம் அமைந்திருந்த நாடு
4. எபொனி என வழங்குவது
5. உலோகங்களை ஒட்டி இணைப்பதற்கான சுடர்
6. காற்றின் வேகத்தை அளக்கும் கருவி
7. பெண்களுக்கும் வாக்குரிமை கோரிக் கிளர்ச்சி செய்த பெண்.
8. பாம்பின் விடமுள்ள உறுப்பு. பல், நா, எது?
9. வண்ணாத்திப் பூச்சி தேனுண்பது - நாவினால், காலினால்.
10. குறுகிய தூரத்தை அளக்குங் கருவி.
11. குயினையின் மருந்துக்கு உதவும் பட்டை.
12. நித்திரையில் நடப்பவரைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்
13. புளூவியோ மீற்றர் என்பது.
14. சாம்பியா, ரொடேசியா இடையிலுள்ள நீர்வீழ்ச்சி.
15. துருவக்கரடி வசிக்கும் பகுதி. ஆர்டிக் - அன்ராட்டிக்
16. இங்கிலாந்தில் அடிமைத்தளை நீக்கப் பாடுபட்டவர்.

## ஐரோப்பிய ஆறுகள்

| | பெயர் | | நீளம் மைல் |
|---|---|---|---|
| 1. | வொல்க்கா | — | 2287 |
| 2. | டானியூப் | — | 1835 |
| 3. | டொன் | — | 1220 |
| 4. | விஸ்ரூலா | — | 860 |
| 5. | றைன் | — | 822 |
| 6. | எல்ப் | — | 722 |
| 7. | லொயர் | — | 632 |
| 8. | ராகுஸ் | — | 626 |
| 9. | எப்ரோ | — | 575 |
| 10. | ஓடர் | — | 565 |
| 11. | ரோன் | — | 503 |
| 12. | சீறி | — | 481 |
| 13. | போ | — | 404 |

## நந்தி உருவம் போதிக்கும் நீதி

புறச்சமயத்தவரான சமணர்கள் நந்தி உருவை மதித்தனர். நந்தி உருவம் ஆடு, மாடு முதலிய மிருகங்களைக் கொல்லவேண்டாம் என வேண்டுகோள்விடுக்கும் வகையில் அமைந்ததுஎன்பர். சமணர் தங்களுக்கு இட்டுக்கொள்ளும் பெயர்களில் நந்தி என்பதையும் சேர்த்து வழங்கினர். எவரும் மாடுகளைக் கொல்லாதிருப்பதற்காக அவர்கள், மாட்டை வழிபாட்டுச் சின்னமாகக் கொண்டொழுகினர்.

## இசை நூல்கள்

இசையும் நாடகமும் காமம் பயப்பன என ஒதுக்கித் தள்ளிய சமணரை இசை விட்டுவைக்கவில்லை. இசை நுணுக்கத்தை ஆராய்ந்த சமணர் செய்த நூல்கள் பல. பெருநாரை, பெருங்குருகு, செயிற்றியம், சயந்தம், இசை நுணுக்கம், பரத சேனாபதியம், இசைத்தமிழ்ச் செய்யுள்.

பண்டிதமணி நினைவு

## கொம்பிளவும் மவ்விழவும்

ஆங்கிலம் பயின்றவர்கள் பதினொருவர் 1942 ஆம் ஆண்டின் ஆவணி மாதத்தில் சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெறுவதற்குச் சென்றார்கள். அவர்களுட் சிலருக்கு வியாழக்கிழமை எழுதுவதில் இரண்டு பிழைகள் உண்டாயின. அவர்களைத் திருத்திவந்த பண்டிதமணி புன்முறுவலோடு சொன்னார். "ஓம் காணும் தமிழுக்கு இரண்டு இழவு, வட மொழிக்கு ஏழு சா" இரண்டு இழவு என அவர் கருதியவை கொம்பிளவு, மவ்விழவு என்பனவற்றை. வடமொழியில் சவர்க்கத்தில் ஏழு இடர்கள் உண்டு.

## இகம் ஈயம்

தேசியமா, தேசீயமா என்பதும், நாகரிகமா, நாகரீகமா என்பதும், இதுபோல் தெய்விகம், தெய்வீகம் எது சரி என்பதில் ஐயம் வந்தபோது பண்டிதமணி அவர்களிடம் ஓடினவரை அவர் சீதாராம சாஸ்திரிகளிடம் அறிந்துவருமாறு அனுப்பினர். சாஸ்திரிகள் இகம் ஈயம் என்று சுருக்கமாக விளக்கினர். தேசியம், நாகரிகம், தெய்விகம் என்றிவ்வாறு அவை அமையும்.

## சிவன் கோயில்

1. சிவன் கோயிலில் எழுந்தருளியிருப்பவர் யாவர்?
சிவபெருமான்
2. சிவபெருமானை எங்ஙனம் வழங்கி வணங்குவர்?
முழுமுதற்தெய்வம், உலகத்துக்குக் கருத்தா.
3. சிவபெருமானைப் பழைய தமிழர் எங்ஙனம் வணங்கினர்?
பிறவாயாக்கைப் பெரியோன், நீலமணிமிடற்றன் ஆலமர் கடவுள்.
4. சிவாலயத்தின் ஆதிமூலத்தில் உள்ளவர் யாவர்?
மூலவர், சிவலிங்கம்.
5. சிவலிங்கம் என்பது எத்தகைய திருவுருவம்?
அருவுருவத் திருவுருவம்.
6. அருவுருவம் என்றால் என்ன?
அருவமும் அல்ல, உருவமும் அல்ல.
7. அருவம் என்றால் என்ன?
கண்ணாற் காணமுடியாதது.
8. உருவம் என்றால் என்ன?
கண்ணாற் காணக்கூடிய திருவுருவம்.
9. சிவபெருமானின் திருவுருவங்கள் எவை?
நடராசர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், பிச்சாடணர் முதலாக இருபத்தைந்து.

# Know your English

**I. Which animals, birds or things make the sound given below:**

*Example*:

howl — wolves

1. mew 2. rumble 3. patter 4. roar
5. tinkle 6. peal 7. hork

*Answers;*

1. gulls 2. traffic 3. rain 4. bull
5. broken glass 6. bell 7. motor horn

**II. Join the correct word found in the brackets with the word given below:**

*Example:-* amiable — good person
(malleable, viscous, choleric, granular, illiterate, calpable, arable)

1. tar 2. copper 3. sand 4. bad-tempered Person 5. uneducated person 6. a guilty person 7. ploughed land.

*Answers:-*

| | | |
|---|---|---|
| malleable | ... | copper |
| visious | ... | tar |
| choleric | ... | bad tempered person |
| granular | ... | sand |
| illiterate | ... | uneducated person |
| calpable | ... | guilty person |
| arable | ... | ploughed land |

**III Give the plural of**

1. loaf 2. roof 3. spoonful 4. hanger-on 5. Lord Justice 6. forget-me-not 7. canon 8. libretto 9. Mr. 10. Madame.

*Answers:*

1. loaves 2. roofs 3. spoonfuls 4. hangers-on 5. Lords Justices 6. forget-me-nots 7. canons 8. libretti 9. Messers 10. mesdames.

**IV Give one word for each of the following:**

*Example:-* a person who eats no meat — vegetarian

1. One who reaches the end of hundred years.
2. A moving stair case
3. A person who is recovering from an illness
4. A man who looks on bright-side of life
5. A five sided figure

*Answers:*

1. centenarian 2. escalator 3. convalescent
4. optimist 5. pentagon

மில்க்வைற் தயாரிப்புகளின்
மேலுறைகளைச் சேகரித்துக் கொடுத்து
பெறுமதி வாய்ந்த பரிசில்களைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறன்
කියවීමෙන් මිනිසෙකු සම්පූර්ණ වෙයි
READING MAKES A MAN PERFECT

அறிவுக் களஞ்சியங்களான:
மில்க்வைற் செய்தி
ஆத்திசூடி
கொன்றைவேந்தன்
உலக நீதி
நல்வழி
வெற்றிவேற்கை

10 நீல சோப் உறைகள் அல்லது 2 பார் சோப் உறைகள் அல்லது 2 சுப்ப மில்க்வைற் உறைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த, பெ. இல. 77, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23233

## உங்களுக்குத் தெரியுமா?

### இவை விடைகள்

1. இக்கொலோஜி 2. திராட்சை 3. பபிலோனியா 4. கருங்காலி 5. ஒக்சி அசெற்றலின் 6. அனிமோ மீற்றர் 7. திருமதி எமிலின் பன்கேஸ்ற் 8. பல் 9. நாவினல் 10. மைக்ரோ மீற்றர் 11. சிங்கோனு 12. Somnambulist 13. மழைமானி 14. விக்ரோறியா 15. ஆட்டிக் 16. வில்லியம் வில்பபோஸ்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப் புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-2-87